செய்தி வெளியீடு எண் : 2115 நாள் : 20.10.2023

# செய்தி வெளியீடு

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், தேவனூர்புதூர், இராவணாபுரம், செல்லப்பம்பாளையம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம், எஸ்.நல்லூர் மற்றும் அர்த்தநாரிபாளையம் ஆகிய கிராமங்களில் நிலவும் கடும் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய சமமட்டக் கால்வாயிலிருந்து நல்லாறு வழியாக பாலாற்றில் 30-க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு குடிநீர் தேவைக்காகவும், கால்நடைகளின் குடிநீர் தேவைக்காகவும், சமமட்டக் கால்வாயில் நெடுக்கை 33.730 கி.மீட்டரில் அமைந்துள்ள மணல் போக்கி மூலம் முதல் 3 நாட்களுக்கு வினாடிக்கு 60 கன அடி வீதமும் (15.55 மில்லியன் கன அடி) அதைத் தொடர்ந்து 2 நாட்களுக்கு வினாடிக்கு 50 கன அடி வீதமும்(8.65 மில்லியன் கன அடி) ஆக மொத்தம் 24.20 மில்லியன் கன அடிக்கு மிகாமல் (நீர் இழப்பு உட்பட) நல்லாற்றின் வாயிலாகப் பாலாற்றில் குடிநீர்த் தேவைக்கு மொத்தம் ஐந்து நாட்களுக்கு 21.10.2023 முதல் 26.10.2023 வரை தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது.

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**
**(நீர்வளத்துறை)**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in